**தருமபுரி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை - திருமதி.மு.ரா.வசந்தி,M.A.,**

ந.க.எண்.994/2026/எப்1 நாள்.27.05.2026.

அய்யா,

பொருள் :- மனைப்பிரிவு – தருமபுரி நகராட்சி – விருபாட்சிபுரம் கிராமம் சர்வே எண்.106(பா), 107/2(பா), 108/1(பா) மற்றும் 109/1(பா), நகரளவு வார்டு எண்.C, பிளாக் எண்.44 மற்றும் புல எண்.3/16-ல் 0-09.29 ஹெக்டேர் (அ) 0.23 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனை உட்பிரிவு செய்ய தொழில் நுட்ப அனுமதி நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களால் வழங்கப்பட்டது - குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :-

1. நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களின் கடித ந.க.எண்.SFSM3322/2026/TCP, நாள்.17.02.2026.
2. திருமதி.கீதா க/பெ கிருஷ்ணன் உண்ணி அவர்களின் விண்ணப்பம் நாள்:19.05.2026.

**உத்தரவு :**

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களின் கடிதத்தில் விருபாட்சிபுரம் கிராமம் சர்வே எண். 106(பா), 107/2(பா), 108/1(பா) மற்றும் 109/1(பா) நகரளவு வார்டு எண்.C, பிளாக் எண்.44 மற்றும் புல எண்.3/16-ல் 0-09.29 ஹெக்டேர் (அ) 0.23 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்திற்கு குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு SWP/DTCP/DHARMAPURI/SUBDIVISION APPROVAL NO.36/2026 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் திருமதி.கீதா க பெ/கிருஷ்ணன் உண்ணி அவர்களின் விண்ணப்பத்தில் உத்தேச மனை உட்பிரிவிற்கு அனுமதி கோரப்பட்டது.

மேற்படி மனை உட்பிரிவிற்கு கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் ஐந்து உட்பிரிவு மனைகளுக்கு ரூ.5000, மனை உட்பிரிவு அனுமதி கட்டணம் 10,000/- மனை உட்பிரிவு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.300/- வீதம் ஐந்து உட்பிரிவு மனைகளுக்கு ரூ.1500/- இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண்.037/CP/26-27/0001660 நாள்.26.05.2026 மற்றும் அபிவிருத்தி கட்டணம் ரூ.70126/- இந்நகராட்சி பற்றுச்சீட்டு எண்.037/01/1/26-27/0002683 நாள்.27.05.2026-ன் படி நகராட்சி கருவுலத்தில் செலுத்தியுள்ளீர்.

எனவே, மனை உட்பிரிவிற்கு எண்.1 முதல் 5 வரை உள்ள மனைகளுக்கு மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

| கிராமம் | சர்வே எண் | வார்டு எண் | பிளாக் எண் | புல எண் | மனை எண் | பரப்பு (சதுர மீட்டர்) |
|---|---|---|---|---|---|---|
| விருபாட்சிபுரம் | 106(பா),107/2(பா), 108/1(பா) மற்றும் 109/1(பா) | C | 44 | 3/16 | 1,2,3,4&5 | 929.00 |

**<u>நிபந்தனைகள்</u>**

1. அரசாணையின்படி, மனைகள் மட்டுமே மனைபிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. இம்மனை உட்பிரிவு ஒப்புதல் உத்திரவு திட்ட மற்றும் கட்டிடத்திற்கான அனுமதி அல்ல. எனவே, இவ்வுத்திரவின் அடிப்படையில் திட்ட மற்றும் கட்டிட அனுமதிக்காக எவ்வித உரிமையும் கோர இயலாது.
3. மனையில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு விதிகளுக்குட்பட்டு திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி தனித்தனியே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
4. மனைபிரிவு ஒப்புதல் உத்திரவு நடப்பில் உள்ள கட்டிட விதிகள், திட்ட விதிகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் ஆகியவற்றை கட்டுப்படுத்தாது.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / மனை உட்பிரிவு வழங்கப்பட்ட ஒப்புதல் ஆணை எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

27/5/26

ஆணையாளர்
தருமபுரி நகராட்சி

பெறுதல்

27/5/26

திருமதி.கீதா க பெ/கிருஷ்ணன் உண்ணி,
5/41, கந்தசாமி வாத்தியார் தெரு,
தருமபுரி நகராட்சி,
தருமபுரி.636701

நகல்:

1.சார் பதிவாளர், தருமபுரி.

2.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி.